# சுற்றுலா எண்ணக்கருவும் வேறுபட்ட பரிமாணங்களும்

**கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபா**
*சிரேஷ்ட விரிவுரையாளர் - வியாபாரப் பொருளியல், முகாமைத்துவத் துறை,*
*முகாமைத்துவ வர்த்தக பீடம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்,*
*ஒலுவில், # 32360, இலங்கை.*

சுற்றுலா என்றால் வேண்டாம் என்று சொல்லக்கூடியவர்களை பார்ப்பது அரிது. அந்த அளவிற்கு சுற்றுலா வாழ்க்கையின் முக்கிய அங்கமாக மாறிவிட்டது. அப்படிப்பட்ட சுற்றுலாவின் முக்கியத்துவத்தை அறிந்துதான் உலக நாடுகள், ஐக்கிய நாடுகள் சபையில் 1979ஆம் ஆண்டு ஒன்று கூடி ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 27ஆம் நாளை உலக சுற்றுலா தினமாகக் கொண்டாட தீர்மானம் நிறைவேற்றின. அந்தவகையில் 1980 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலாத்துறை அமைப்பினால் உலக சுற்றுலா தினமானது கொண்டாடப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமான உலக சுற்றுலா அமைப்பு 2017ஆம் ஆண்டை "நிலையான சுற்றுலா வளர்ச்சிக்கான ஆண்டாக" பிரகடனம் செய்து உள்ளது. இதன் கீழ் எல்லாத் துறைரீதியாகவும் நிலைத்து நிற்கக் கூடியவகையில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யவேண்டியது தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

சுற்றுலா என்ற எண்ணக்கருவிற்கு சிறந்ததோர் வரைவிலக்கணத்தை விளக்கத்தை வழங்குவது கடினமாகும். சுற்றுலாத்துறை சார் இலக்கியங்களில் சுற்றுலாத் துறை என்பதற்கு பல்வேறு வகையான வரைவிலக்கணங்களும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருப்பதோடு இது ஒரு வகையான பன்முகத்தன்மையை காட்டுகிறது. சுற்றுலாத் துறையென்பதனை பல்வேறு கோணங்களிலிருந்து வரையறுக்க முடியும். உதாரணமாக ஒரு பொருளியலாளர் சுற்றுலாத் துறை தொடர்பாக வரையறுக்கும் போது அவர் சுற்றுலாத் துறை தொடர்பான பொருட்களின் உற்பத்தி விநியோகம் மற்றும் அவற்றிற்கான கேள்வி என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு அவ் வரைவிலக்கணத்தினை வரையறுப்பர். அதே போன்று சுற்றுலாத் துறை திணைக்களம் புள்ளி விபரவியல் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிவிபரவியல் தொடர்பான வரைவிலக்கணத்தைக் கொடுக்கலாம். எவ்வாறாயினும் சுற்றுலாத்துறை என்றால் என்ன என்பதற்கு ஒரு காத்திரமான வரைவிலக்கணத்தை வழங்க வேண்டியது அவசியமானதாகும். அந்தவகையில் சுற்றுலாத் துறை என்பதற்கான முதலாவது வரைவிலக்கணத்தினை 1937ஆம் ஆண்டு புள்ளி விபரவியலாளர்கள் வெளியிட்டுள்ளனர். அர்களுடைய வரைவிலக்கணத்தின் படி சுற்றுலா என்பது "ஒருவர் 24 மணித்தியாலங்களோ அல்லது அதற்கு மேலாகவோ தனது சொந்த இடத்திற்கு வெளியில் பிரயாணம் செய்யும் போது அதனை சுற்றுலா எனலாம் என்கின்றனர். இவ்வரைவிலக்கணத்தில் குறிப்பாக வியாபார நோக்கத்திற்காக, மருத்துவத்திற்காக மற்றும் ஏனைய நோக்கங்களிற்காக (ஆய்வு போன்றன) வெளியில் செல்பவர்கள் அனைவரும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இதில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளடக்கப்படவில்லை எனக்கூறி இவ்வரைவிலக்கணத்தை பின்வந்த அறிஞர்கள் விமர்சித்தனர். சுற்றுலாத்துறை என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் பின்வந்த காலங்களில் கொடுக்கப்பட்ட போதிலும் உலக சுற்றுலாத்துறை நிறுவனம் அதற்கு சிறந்ததோர் வரைவிலக்கணத்தைக் கொடுக்கிறது. அந்தவகையில் சம்பளம் பெற்றுக்கொள்ளும் எந்த செயற்பாடுடனும் தொடர்பில்லாத பொழுதுபோக்கு, வணிகம் மற்றும் வேறு நோக்கங்களுக்காக 24 மணித்தியாலங்களுக்கு குறையாமலும் தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேற்படாமலும்

தமது வழமையான சுற்றுச் சூழலுக்கு வெளியே சென்று அங்கு தங்குகின்ற ஒரு மனித செயற்பாடே சுற்றுலா என்கிறது. மறுபுறம், சொந்த இடங்களுக்கு அப்பால் பயணிக்கும் தனியார் மற்றும் குழுக்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து, தங்குமிடம், உணவு, குடிவகை, சில்லறைக்கடைகள், உல்லாச வசதிகள், வேறு உபசரணை சேவைகள் ஆகியன அடங்கிய பயண அனுபவத்தை வழங்கும் செயற்பாடுகள், சேவைகள், தொழில்கள் என்பனவற்றின் தொகுப்பே சுற்றுலாத் துறையாகும் என்கின்றனர்.

சுற்றுலா என்ற எண்ணக்கருவானது வேறுபட்ட துறைகள் சார்பாக வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டு காணப்படுகிறது. சமூகவியல், புவியியல், வரலாறு, முகாமைத்துவம், பொருளாதாரம் என ஒவ்வொரு துறைரீதியாகவும் இது வேறுபட்ட பரிமாணங்களில் நோக்கப்படுகிறது. அந்தவகையில் பொருளாதார ரீதியாக நோக்குகின்ற வேளையில் சுற்றுலாத்துறையானது ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பினைச் செய்கிறது. சுற்றுலாப் பொருளியல் எனப்படுவது சுற்றுலாவால் ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படுகின்ற நேரடியான மறைமுகமான தாக்கங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பாக ஆராய்கின்ற ஒன்றாகக் காணப்படுகிறது. பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் சாத்தியக்கூற்றைக் கொண்ட துறையாக அண்மைக்காலமாக சுற்றுலாத் துறையானது வளர்முகநாடுகளில் அதிகம் பிரபல்யம்பெற்று வருகிறது. இச் சுற்றுலாத் துறை உலகில் குறைந்த செலவில் அதிக இலாபம் தரும் துறையாக உலகம் பூராகவும் உணரப்பட்டுள்ளது.

சுற்றுலா ஒரு சேவைத்துறையாக இருந்த போதும் தற்பொழுது பொருளியலாளர்கள் அதனை ஒரு கைத்தொழில்துறையாக வரைவிலக்கணப்படுத்துகின்றனர். ஏனெனில் சுற்றுலா சேவைத்துறையுடன் இணைந்ததாக பல்வேறு தயாரிப்புத்தொழில்களும் உள்ளடக்கப்படுவதனால் இதனை கைத்தொழிலாகக் கருதுகின்றனர். இது கூலி அல்லது சம்பளம் போன்ற பொருளாதாரரீதியான எதிர்பார்ப்புக்கள் எதுவுமின்றி மேற்கொள்ளுகின்ற ஒரு மனித செயற்பாடாகக் காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள், தங்குமிடவிடுதிகளின் உரிமையாளர்கள், பிரயாண முகவர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் என பல குழுக்களின் ஒன்றிணைவாக சுற்றுலா இருக்கும். இதனை நீண்டகால செயற்பாடாகக் கருதமுடியாவிட்டாலும் பல குறுங்காலங்களை உள்ளடக்கிய செயற்பாடாகக் காணப்படும். இது ஒரு பருவகாலத் தொழிலாகவும் காணப்படுகிறது. சுற்றுலாத்துறையானது பல்வேறு சேவைத் துறைகளை தொகுத்து வழங்குகின்ற ஒரு சேவைத்துறையாகக் காணப்படுகிறது. சுற்றுலா தொழிற்துறையில் சுற்றுலாப் பிரயாணிகள் தங்குவதற்கென தங்குமிட விடுதிவசதிகள், உணவு குடிபான வசதிகள், போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், உல்லாச வசதிகள், பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவற்றை வழங்குகின்ற செயற்பாடுகள் தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் இவற்றை ஒழுங்குசெய்து கொடுப்பதற்கென பிரயாண முகவர்களும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்கென சுற்றுலா வழிகாட்டிகளும் காணப்படுகின்றனர். மேலும் சுற்றுலாப் பயணிகள் தமது சொந்த இடத்திற்கு திரும்புவதற்கு அவர்களை கட்டியெழுப்பி அனுப்புகின்ற முகவர்களும் இதில் தொடர்புபடுகின்றனர். மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான பரிசுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் ஆடைகளும் இதில் அடங்கும். இவ்வாறு சுற்றுலாத்துறையென்பது பல்துறைகளின் ஒன்றிணைவாக இருக்கும். எனவே ஒரு பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறையானது வளர்ச்சியடைகின்ற போது அதனோடு தொடர்புடைய ஏனைய துறைகளுக்கான கேள்வி அதிகரித்து அத்துறைகளும் வளர்ச்சியடையும்.

சுற்றுலா என்பது ஒரு பொருளாதாரம் சார்ந்த நடவடிக்கையாகும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அவசியமான ஒரு துறையாக சுற்றுலாத்துறையானது மாறிக்கொண்டு வருகிறது. ஒரு நாட்டிற்கு

அதிகளவு தேசிய வருமானத்தினை ஈட்டித் தருகின்ற முன்னணிக் கைத்தொழில்களில் ஒன்றாக சுற்றுலாக் கைத்தொழில் விளங்குகிறது. சுற்றுலாத்துறையானது ஆண்டுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் வருமானம் ஈட்டுகின்ற உலகின் மிகப் பெரிய தொழில்களில் ஒன்றாகவும் உள்ளது. சர்வதேச வர்த்தக வரிசைப்படுத்தலின்படி எரிபொருட்கள், இரசாயணங்கள் மற்றும் மோட்டடார் வாகன உற்பத்திப் பொருட்களை அடுத்து நான்காவது நிலையிலுள்ள ஏற்றுமதி வகையாக சுற்றுலா உள்ளது. சுற்றுலாத்துறையானது ஒரு பொருளாதாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகிறது. உலகளாவிய ரீதியில் சுமார் 230 மில்லியன் மக்கள் சுற்றுலா தொழிற்துறையில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொண்டுள்ளதோடு இது உலகளாவிய ரீதியிலுள்ள மொத்த ஊழியப்படையில் 8% ஆகக் காணப்படுகிறது.

உலகத்தில் காணப்படும் பாரிய வாத்தகத் துறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை காணப்படுவதுடன் சராசரியாக ஒவ்வொரு நாட்டினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% மேலாக பங்களிப்புச்செய்கிறது. குறிப்பாக மாலை தீவு நாட்டின் பொருளாதாரமே சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாயில் தங்கியிருப்பதோடு அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சுற்றுலாத்துறை மட்டும் 60% - 80% பங்களிப்புச் செய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. உலகளாவியரீதியில் நோக்குகின்ற போது உலகில் காணப்படும் 150 நாடுகளில் (ஐந்து நாடுகளில் நான்கு நாட்டில்) சுற்றுலாத்துறையானது பிரதான வருமானமீட்டும் துறைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. உலகில் உள்ள 60 நாடுகளை எடுத்துக் கொண்டால் சுற்றுலாத்துறையானது முதல்தர வருமானம் ஈட்டும் துறையாகக் காணப்படுகிறது (WTO, 2009).

உலகம், உயர்தரத்திலான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பனவற்றை நோக்கிச் செல்வதால், சுற்றுலாத்துறையின் செயற்பாடானது பொருளாதார ரீதியாக மிகுந்த வளவாய்ப்புக்களைக் கொண்டதாக மனித செயற்பாடுகளால் அதிகளவுக்கு வழிப்படுத்தப்படுகிறது. உலகமயமாதல் முக்கியத்துவம் பெற்றுள்ள இப்புதிய பொருளாதார ஒழுங்கு காரணமாக சர்வதேச சுற்றுலாத்துறையின் வீச்சு விசாலித்து வருகின்றதென்றே கூறவேண்டும். வறிய மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் அந்நியச் செலாவணி வருமானங்களைப் பெற்றுத் தருவதாலும், சுற்றுலாப் பயண இலக்குகளுக்கு மறைமுகமாக அதிகளவு வாய்ப்புக்களைக் கொண்டு வருவதாலும் சர்வதேச சுற்றுலாத்துறை மேலதிக முக்கியத்துவத்தை பெறுகிறது. குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உலக பொருளாதாரத்தில் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கான ஒரு முதன்மை வழியாக சுற்றுலாத்துறை மாறியிருக்கிறது. சுற்றுலா தொழிற்துறை மூலமாக நாடுகள் அந்நியச் செலாவணி வருமானத்தினை உழைத்துக் கொள்கின்றன. மேலும் சுற்றுலாத் தொழில் வளர்ச்சியினால் பிராந்திய அபிவிருத்தியும் பிராந்திய பொருளாதாரமும் வளர்ச்சியடைகின்றது. அதாவது உல்லாசப் பயண பாதுகாப்பு பிரதேசத்திற்கும் அதனை அண்மித்த பிரதேசத்திற்கும் அடிப்படை வசதிகளை விருத்திசெய்தல், நவீன முறையிலான உல்லாச வசதிகளை அதிகரித்தல் போன்றவற்றால் பிரதேச அபிவிருத்தி ஏற்படுகிறது. மேலும் உல்லாச பிரயாண சேவைகளுக்காக வீதி அபிவிருத்திகள் போன்ற சுற்றுலாத்துறையோடு சம்பந்தப்பட்ட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் விருத்தி செய்யப்படுவதால் பின்தங்கிய கிராமப்புற பிரதேசங்களும் அபிவிருத்தியடைவதோடு பிராந்தியரீதியாக அபிவிருத்தியில் காணப்படுகின்ற சமமற்ற தன்மைகளும் குறைவடைகிறது. இவ்வாறு பொருளாதார ரீதியாக சுற்றுலாத்துறையின் பரிமாணமானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

சுற்றுலா தொழிற்துறையானது புவியியல் ரீதியாகவும் முக்கியமான பரிமாணங்களைக் கொண்டு விளங்குகிறது. புவியலுக்கும் சுற்றுலாவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவதோடு இதன் விளைவாக உருவான சுற்றுலா புவியியலானது (Tourism Geography) பிரயாண மற்றும் சுற்றுலாவில் புதிய ஒரு பரிமாணத்தினையும் சேர்த்துள்ளது. சுற்றுலாப் புவியியலானது பிரயாண மற்றும் சுற்றுலா பற்றிய ஒரு துறையாகவும் சுற்றுலாவால் சுற்றுலாத் தலங்களில் ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக ஆராய்கின்ற விஞ்ஞானத்தின் கிளையாகவும் காணப்படுகிறது. சுற்றுலா புவியியலானது சுற்றுலாவால் சுற்றுலாத் தலத்தில் (சுற்றுலா இடங்கள்) ஏற்படுகின்ற சுற்றுச்சூழல் பாதிப்புக்கள், புவியியல் ரீதியான சுற்றுலா வெளிப்பாடுகள் பொழுதுபோக்கு சுற்றுலா மற்றும் இடம்சார் சுற்றுலா போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. புவியியலானது சுற்றுலா பற்றிய ஆய்வுக்கு அடிப்படையானது ஆகும்.

ஏனெனில் சுற்றுலாவானது புவியியல்ரீதியாக இயற்கையானது ஆகும். சுற்றுலாவானது சுற்றுலா தலங்களை இடங்களை மையமாகக் கொண்டே இடம்பெறுவதோடு புவியியல் ரீதியாக இடங்களுக்கிடையில் மக்களுடைய இயக்கம் மற்றும் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. அதாவது சுற்றுலா நோக்கம் கருதி மக்கள் புவியியல் ரீதியான எல்லைகளைக் கடந்து ஓர் இடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு நகர்வடைகின்ற ஒரு செயற்பாடாக காணப்படுகிறது. இது உலக சுற்றுலாவாகவோ சர்வதேசரீதியாக மேற்கொள்ளுகின்ற வெளிநாட்டு சுற்றுலாவாகவோ, உள்நாட்டுக்குள் மேற்கொள்ளுகின்ற பிராந்தியங்களுக்கு இடையிலான சுற்றுலாவாகவோ, உள்ளூர் சுற்றுலாவாகவோ இருக்கலாம். அந்த அடிப்படையிலேயே சுற்றுலாவானது உள்நாட்டு சுற்றுலா வெளிநாட்டு சுற்றுலா என இரண்டு வகைப்படும்.

குறித்த ஒரு நாடு சுற்றுலா பயணிகளைக் கவர்ந்திழுக்க் கூடியவகையில் புவியியல்ரீதியாக சிறந்த இடஅமைவினையும் சிறந்த தரைத்தோற்ற அமைப்பினையும் கொண்டு காணப்படுமாயின் அது அந்நாட்டின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு ஏதுவாக அமையும். இயற்கை வளங்களை மூலதனமாகக் கொண்டு இயங்குகின்ற துறையான சுற்றுலாத்துறையை விருத்திசெய்வதன் மூலமாக பலநாடுகள் அதிக வருமானத்தினை உழைத்துக்கொள்ளுகின்றன. இதமான சிறந்த காலநிலை, புவியியல்ரீதியாக சிறந்த தரைத்தோற்ற அமைப்பு, இயற்கை வனப்புமிக்க கண்கவர் பிரதேசங்கள், அழகான இயற்கை காட்சிகள், பசுமையான புல்வெளிகள், அழகான கடற்கரையோரங்கள், அழகிய மலைப்பாங்கான பிரதேசங்கள், நதிகள், நீர்வீழ்ச்சிகள், இயற்கையான வனப்பகுதிகள் என்பன சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய புவியியல்ரீதியான அம்சங்களாக விளங்குகின்றன. இவற்றின் பால் ஈர்க்கப்பட்டே பெரும்பாலான சுற்றுலாப் பிரயாணிகள் இவற்றைக் கண்டு கழிப்பதற்காக சுற்றுலாவினை மேற்கொள்ளுகின்றனர். அந்தவகையில் இலங்கையானது அதிக சுற்றுலாப் பிரயாணிகளைக் கவரக்கூடியவகையில் புவியியல் ரீதியாக சிறந்ததொரு கேந்திர ஸ்தானத்தில் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புவியியலாளர்கள் சுற்றுலாவால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் எதிர்மறையான விளைவுகள் குறித்துக் கவனத்திற் கொள்வதோடு சுற்றுச் சூழலுக்கும் சமூகத்திற்கும் மிகவும் குறைந்தளவில் பாதிப்பினை ஏற்படுத்தும் மாற்றுவழிச் சுற்றுலா பற்றிச் சிந்திக்கின்றனர். இம் மாற்றுவழிச் சுற்றுலாவாக மென் சுற்றுலாத்துறை, பசுமை சுற்றுலாத்துறை, இயற்கை சுற்றுலாத்துறை, சூழல்சார் சுற்றுலாத்துறை போன்றவை காணப்படுகின்றன. எல்லா வகையான மாற்றுவழிச் சுற்றுலாத் துறைகளும் "நிலைத்து நிற்கக்கூடிய சுற்றுலாத்துறை" என்ற ஒன்றிற்கே இட்டுச் செல்லுகின்றன. இம்மாற்றுவழிச் சுற்றுலாவில் சூழல்சார் சுற்றுலாவானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. அந்தவகையில்

சூழல்கார் சுற்றுலாத்துறை எனப்படுவது "இயற்கையான பிரதேசங்களுக்கு சூழல் தொடர்பான ஒரு வகையான கரிசனையுடன் பிரயாணம் மேற்கெள்ளுவதும் அப் பிரயாணமானது சூழலை பாதுகாப்பதும், உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்க கூடியதுமாக காணப்படும்போது அது சூழல்சார் சுற்றுலாத் துறை எனப்படும். இதன் மூலமாக சுற்றுலாவால் சுற்றுச்சூழலுக்கும் சமூக பொருளாதார கலாசாரரீதியாகவும் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களையும் குறைத்துக்கொள்ள முடியும் என புவியியலாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு புவியியல்ரீதியாக சுற்றுலாத்துறையின் பரிமாணத்தினை நோக்கமுடியும்.

சமூகவியலில் சுற்றுலாவின் பரிமாணமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. சமூகவியலாளர்களின் பார்வையில் சுற்றுலாவானது சமூகங்களுக்கிடையே நல்லுறவினையும் நல்லிணக்கத்தினையும் சமூக ஒருங்கிணைப்பினையும் சமூக ஒருமைப் பாட்டினையும் ஏற்படுத்துகின்ற பாலமாக நோக்கப்படுகிறது. சுற்றுலாவில் சமூகவியலானது முக்கிய பங்கினை வகிக்கிறது. சுற்றுலாவில் சமூகவியல் எனப்படுவது சுற்றுலா மேற்கொள்ள தூண்டுகின்ற காரணிகள் மற்றும் சுற்றுலா நோக்கங்கள், வகிபங்கு, தொடர்புகள், சமூக நிறுவனங்கள் அவை சுற்றுலாப் பயணிகள் மீது ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் சுற்றுலாவினை வழங்குகின்ற நாடுகளில் ஏற்படுகின்ற சமூகவியல்ரீதியான தாக்கங்கள் என்பனவற்றைப் பற்றிய ஒரு கற்கையாகக் காணப்படுகிறது.

சுற்றுலாவில் சமூகவியலானது சுற்றுலா நடவடிக்கைகளால் எவ்வாறு வெவ்வேறு சமூகத்தவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளுகின்றனர் எனவும் சுற்றுலாவால் சமூகங்களுக்கிடையே ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாகவும் ஆராய்கிறது.

சுற்றுலாப் பிரயாணிகள் தாம் சுற்றுலா மேற்கொள்ளுகின்ற குறிப்பட்ட சுற்றுலாத் தலத்தின் அழகினைக் கண்டு ரசிப்பதோடு மட்டுமல்லாமல் அப்பிரதேசத்தில் வாழுகின்ற சமூகத்தவருடைய கலாச்சாரங்கள், பாரம்பரியங்கள், பண்பாடுகள், விழுமியங்கள், மரபுகள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றை அறிந்து கொள்ளவும் முற்படுகின்றனர். மேலும் சுற்றுலா மூலம் சுற்றுலாப் பயணிகளின் பழக்கவழக்கங்கள், நடத்தைக்கோலங்கள், அவர்களுடைய கலாச்சாரங்கள் என்பனவற்றை அறிந்துகொள்ள முடியும். அதாவது அபிவிருத்தியடைந்த மேலைத்தேய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பிரயாணிகள் வளர்முக நாடுகளுக்கு சுற்றுலாவினை மேற்கொள்ளுகின்றபோது அவர்களுடைய மேம்படுத்தப்பட்ட நாகரிகங்கள், கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றை அறிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதோடு அவற்றை நாமும் பின்பற்றி நமது வாழ்க்கையை முன்னேற்ற முடிகிறது. அதுமட்டுமல்லாமல் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளிடமிருந்து சிறந்த நற்பண்புகளையும் கற்றுக்கொள்ள முடிகிறது.

வெவ்வேறு நாடுகளுக்கு சுற்றுலாப் பிரயாணங்களை மேற்கொள்ளும்போது வெவ்வேறு நாட்டு மக்களுடைய கலாச்சாரங்கள் பாரம்பரியங்கள் மற்றும் அவற்றின் பெறுமதிகளை மதித்து அவற்றை குறைவாக எடை போடாமல் அவற்றுக்குரிய முக்கியத்துவத்தினையும் மதிப்பினையும் வழங்கவும் உதவுகிறது. சுற்றுலாவில் சமூகவியலானது சுற்றுலாத்துறையை வலுப்படுத்துவதோடு இச்சுற்றுலாவினை சுயதொழிலாக முன்னெடுப்பதனூடாக பின்தங்கிய சமூக மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதோடு சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சுற்றுலா மூலமான சமூக அபிவிருத்தியானது உதவுகிறது எனலாம். சிலர் பிற நாட்டு, பிற சமுதாய மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்களின் பண்பாடுகள், கலாச்சாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் அந்த அறிவை விரிவாக்கிக் கொள்வதற்காகவும் சுற்றுலாவினை மேற்கொள்ள விரும்புகின்றனர். இவ்வாறு சுற்றுலாப் பிரயாணங்களை மேற்கொள்வதனூடாக

வெவ்வேறு சமூகத்தவர்களிடையே புரிந்துணர்வையும் ஒருமைப்பாட்டினையும் மற்ற சமூகத்தவர்களுடைய கலாச்சாரங்களை மதிக்கும் மனப்பாங்கினையும் வளர்த்துக்கொள்ள முடியும். மேலும் சுற்றுலா மூலமாக பல் இன, கலாசார, மொழி பேசுகின்ற மக்கள் சமூகங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடிவதால் உலக சமாதானத்திற்கு வழிப்படுத்துகிறது.

சுற்றுலாவால் சமூக அபிவிருத்தி ஏற்பட்டாலும் தவிர்க்க முடியாத வகையில் பாதகமான சில சமூகவியல்ரீதியான தாக்கங்களும் ஏற்படுகின்றன. சுற்றுலாவால் ஏற்படுகின்ற சமூகவியல்ரீதியான தாக்கங்கள் எனும் போது அது சுற்றுலாத் தலத்தினை அல்லது அச் சுற்றுலாவினை வழங்குகின்ற சமூகத்தினை சுற்றியதாக காணப்படும். சுற்றுலாவானது ஒரு சமூகத்தினை பல வழிகளில் பாதிக்கிறது. இதனால் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்படுவதோடு வெளிநாட்டவர்களுடைய நவநாகரீக வாழ்க்கை முறைகளையும் அவர்களுடைய ஆடைக் கலாச்சாரங்களையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுவதால் கலாச்சார சீரழிவுகள் ஏற்படுவதோடு எமது பண்பாடுகள் விழுமியங்களும் பாதிக்கப்படுகின்றன. இதனாலேயே பொதுவாக சமூகங்கள் சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக தமது கலாச்சாரம் பாதிக்கப்படுவதாக முறையிடுகின்றனர். சுற்றுலாப் பயணிகளில் பலர் தனிப்பட்டவர்-களுடைய கலாசாரம் தொடர்பாக வேறுபட்ட எண்ணத்தினை கொண்டிருக்க முடியும். எவ்வாறாயினும் சமூகங்கள் சுற்றுலாத்துறையை தங்களது கலாச்சாரத்தினை முன்னேற்றுவதற்கான மூலோபாயமாகவும் பயன்படுத்த முடியும். குறிப்பிட்ட சமூகத்தவருடைய பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை சுற்றுலாப்பயணிகளுக்கு விளக்குவதன் மூலமாக சுற்றுலாப் பயணிகளுக்கு உள்ளூர் கலாச்சாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இவ்வாறு சமூகவியல்ரீதியாக சுற்றுலாத்துறையின் பரிமாணத்தினை நோக்க முடிகிறது.

வரலாற்று துறைரீதியாகவும் சுற்றுலாவானது முக்கியமான பரிமாணத்தினைக் கொண்டு விளங்குகிறது. நாகரீக சுற்றாடலில் வாழுகின்ற மக்கள் வரலாற்றுரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த புராதன இடங்களைப் பார்வையிடுவதற்காக சுற்றுலாப் பிரயாணங்களை மேற்கொள்ளுகின்றனர். அதாவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களை வரலாற்றுரீதியான நினைவிடங்களை பர்வையிடுவதனூடாக அவற்றுக்கு பின்னால் மறைந்து கிடக்கின்ற வரலாறுகளையும் புராண இதிகாச கதைகளையும் அறிந்து கொள்வதற்காகவும், தொல்பொருள் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காகவும், அவற்றில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற கலைநுட்பங்கள் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வதற்காகவும் சுற்றுலாப் பிரயாணிகள் சுற்றுலாப் பிரயாணங்களை மேற்கொள்ளுகின்றனர். இதனால் வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் சுற்றுலாத்துறையால் பிரபல்யமடைகிறது. அவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் மகத்துவம், பெருமைகள், பெறுமதிகள் அவற்றை பார்வையிட வருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மூலமாக உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் புராதன வரலாற்று நினைவுச் சின்னங்களையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவதற்காக அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகைதருவதால் அந்நாட்டின் சுற்றுலாத்துறை வளர்ச்சியடைவதோடு சுற்றுலாத்துறை மூலமான வருமானமும் அதிகரிக்கிறது. எனவே இவ் வரலாற்று சிறப்புமிக்க இடங்களை மையமாகக் கொண்டே சுற்றுலாத்துறை அதிகம் வளர்ச்சியடைவதால் அவ் புராதன நினைவுச் சின்னங்கள் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை புனருத்தாரணம் செய்து எமது கலாச்சார மரபுரிமைகளையும் வரலாற்று அடையாளங்களையும் பேணிப்பாதுகாக்கும் பணியில் அரசாங்கங்கள் ஈடுபடுகின்றன. அதுமட்டுமல்லாமல் அவற்றின் பெருமையை உலகம் அறிந்து, உலகில்

பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய உலக மரபுரிமைச் சொத்துக்களாகவும் அடையாளப்படுத்தி உள்ளது. எனவே ஒரு நாட்டின் வரலாறினை வரலாற்றுரீதியாக அந்நாடு கொண்டிருக்கின்ற பெருமையினை அதன் வரலாற்று அடையாளங்களை இப்புராதன வரலாற்று இடங்களின் மூலமாக உலகிற்கு காண்பிக்கவும் அவ்வரலாற்று இடங்களை பிரபல்யப்படுத்தவும் சுற்றுலாத்துறை பங்களிக்கிறது எனலாம்.

வரலாற்றுரீதியாக நோக்கின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியும் பரவலாக்கமும் 20ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியிலிருந்தே தொடங்கிவிட்டது. ஆரம்பகாலத்தில் இடங்களைச் சென்று பார்வையிடுகின்ற, ஓய்வினைக் கழிக்கின்ற ஒரு மனித செயற்பாடே சுற்றுலா எனப்பட்டது. ஓய்வுரீதியாக, கடமைரீதியாக இது இருக்கலாம். ஆரம்பகாலத்தில் மக்கள் இடங்களைச் சென்று பார்வையிடுவதற்காகவும், ஓய்வினை கழிப்பதற்காகவும், அலுவலக வேலையின் நிமித்தமாக கடமைரீதியாகவும் சுற்றுலாக்களை மேற்கொண்டனர். பல வருடங்களுக்கு முன்பு உலகத்தில் பல நாடுகளில் சுற்றுலாத்துறையென்பது தற்போது இருக்கின்றவாறு பெரிதாக வளர்ச்சியடைந்து காணப்படவில்லை. அக்காலத்தில் உலகத்தில் சில வளர்ச்சியடைந்த நாடுகளிலேயே சுற்றுலாத்துறையென்பது ஓரளவுக்கு வளர்ச்சிபெற்ற நிலையில் காணப்பட்டது. ஆனால் தற்போது உலகளாவிய ரீதியில் சுற்றுலாத்துறையானது மிகவேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு துறையாகக் காணப்படுகிறது. குறிப்பாக நாம் தற்போது காணும் பாரிய சுற்றுலாத்துறையானது இரண்டாம் உலகப் போரைத் தொடந்தே தோற்றம் பெற்றது எனலாம். அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழ்கின்ற உயர்ந்த தலாவருமானம் கொண்ட பணம் படைத்த மக்கள் மட்டுமே ஆரம்பகாலத்தில் சுற்றுலா மேற்கொள்ளக்கூடியவர்களாக இருந்தனர். ஆனால் தற்போது மக்களுடைய தலாவருமானம் அதிகரித்தாலும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தாலும், போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியடைந்தமையாலும், நிதி வசதிகள் பெருக்கமடைந்தமையாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழ்கின்ற மக்கள் மட்டுமன்றி மூன்றாம் உலக நாடுகளில் வாழ்கின்ற மக்களும் சுற்றுலா செல்ல முயற்சிக்கின்றனர். சிறிய வருமானம் உழைக்கின்ற நடுத்தர மக்களும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணம் மேற்கொள்ள விரும்புபவர்களாக மாறியிருப்பதோடு அவர்கள் அதிகம் சமூகரீதியான சுற்றுலாக்களையே மேற்கொள்ள விரும்புபவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு வரலாற்றுரீதியாக சுற்றுலாத்துறையின் பரிமாணத்தினை நோக்கமுடியும்.

முகாமைத்துவத் துறை சார்பாக சுற்றுலாத்துறையின் பரிமாணமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சுற்றுலாத்துறையானது நிலைத்துநிற்கக் கூடியவகையில் அதனை முகாமைத்துவம் செய்யவேண்டியது அவசியமானதாகக் காணப்படுகிறது. சுற்றுலா முகாமைத்துவம் எனப்படுவது சுற்றுலா மற்றும் விருந்தோம்பலோடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வைசெய்கின்ற ஒன்றாகக் காணப்படுகிறது. அதாவது சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனங்கள், சங்கங்கள், பொது அதிகாரசபைகள் சுற்றுலா வாடிக்கையாளர்களுக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொடுப்பதோடு அதனோடு அதாடர்புடைய எல்லா செயற்பாடுகளையும் முகாமைத்துவம் செய்கின்ற ஓர் நிறைவேற்று தொழிற்பாடாகக் காணப்படுகிறது எனலாம். சுற்றுலாவினை மேற்கொள்ளுவதற்கு முன்னர் சுற்றுலா தொடர்பாக திட்டமிடவேண்டியது அவசியமானதாகக் காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் தங்களுடைய சொந்த இடங்களுக்கு திரும்பச் செல்லும் வரைக்கும் அவர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகள் போக்குவரத்து மார்க்கங்கள் மற்றும் பிரயாண வசதிகள், உணவு குடிபான வசதிகள் மற்றும் அவர்களுக்குத் வேண்டிய ஏனைய சேவைகளை அவர்களுடைய தேவைக்கேற்ப

அவர்களுடைய பிரயாணப் பொதியின் செலவை குறைக்கக்கூடிய வகையில் திட்டமிட்டு செலவு மற்றும் நேர முகாமைத்துவம் செய்து எல்லாவற்றையும் தொகுத்து வழங்குபவர்களாக சுற்றுலா முகவர்கள் முக்கியம் பெறுகின்றனர்.

சுற்றுலாப் பயணிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் அவர்களுக்கு சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்குவதற்கு விருந்தோம்பலினூடாக சுற்றுலாத்துறையை முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமானதாகும் இவ்விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா முகாமைத்துவமானது உணவு முகாமைத்துவம், தங்குமிட விடுதி முகாமைத்துவம், உணவு குடிபான வசதி மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பான முகாமைத்துவம், சுற்றுலா பொழுதுபோக்கு முகாமைத்துவம், சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் விடயங்கள் சார் முகாமைத்துவம், நிலைத்துநிற்கும் சுற்றுலா போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகிறது. இச்சுற்றுலா முகாமைத்துவமானது மூன்று விடயங்கள் சார் அறிவியல் விஞ்ஞானமாகக் காணப்படுகிறது. அதாவது வியாபாரம் சார் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் தத்துவங்கள், சுற்றுலாக் கோட்பாடுகள் மற்றும் சுற்றுலா தலைப்புக்கள் (சுற்றுலா நோக்கங்கள், சுற்றாடல் காரணிகள், சுற்றுலா நிறுவனங்கள்) ஆகிய விடயங்கள் தொடர்பாக சுற்றுலா முகாமைத்துவம் ஆராய்கிறது.

சுற்றுலாவானது இயற்கை வளங்களையும், சூழற்தொகுதியையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற துறையாகக் காணப்படுகிறது. எனவே ஒரு பிரதேசத்தில் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்தும் போது சுற்றுலா மையங்களைத் தீர்மானிக்கும் போது அப் பகுதிகள் தொடர்பான பல்வேறு அம்சங்களைக் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறு கருத்திற் கொள்ளாது சுற்றுலா மையங்களை நிறுவும் போது அவை பல்வேறு எதிர்மறையான விளைவுகளை அதனைச் சூழவுள்ள சுற்றாடலிலும் சமூகத்திலும் பிரதிபலிக்கின்றது. ஆகையால் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்துவதற்காக சுற்றுலா மையங்களைத் திட்டமிடும் போது சுற்றுச் சூழலுக்கு பாதிப்புக்கள் ஏற்படா வண்ணம் சூழல்சார் சுற்றுலா மையங்களை முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமானதாகக் காணப்படுகிறது. இவ்வாறு முகாமைத்துவரீதியாக சுற்றுலாத்துறையின் பரிமாணத்தினை நோக்க முடிகிறது. இவ்வகையில் தொகுத்துக் கூறின், எல்லாத் துறைரீதியாகவும் சுற்றுலாவானது வெவ்வேறு பரிமாணங்களில் நோக்கப்படுவதால் சுற்றாலாவானது பல்பரிமாண இயல்பினைக் கொண்ட ஒரு பன்முகத் தன்மை கொண்ட எண்ணக்கருவாகக் காணப்படுகிறது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


சசிவதனி.த, (2010), **“சூழல் சுற்றுலா”**, கலைப்புலம், கலைப்பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இதழ் 01.

மனோஜ் குமார் அகர்வால், குணசிங்க. கே.ஜீ.எஸ்.டீ. (மாசி-பங்குனி, 2011), **“சுற்றுலாத் துறை”**, பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, மலர் 36, 3-44.

ஜயவிக்ரம.ஜே.எம்.ஏ, (ஜீன்-ஆகஸ்ட் 2000), **“சுற்றுலாக் கைத்தொழில்”**, பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, மலர் 26, 2-29.

Bishwanath Ghosh, (2003), *Tourism & Travel management*, Hindustan Offset printers, Delhi, pp:79-86.

Donald.V.L, Macleod, (2006), *Tourism, Globalization & Cultural Change An Island community perspective*, viva books pvt ltd. India, pp: 3-4, 66-70.

Guruge. G, (2009), “The Impact of International Tourism on Peripheral Regions: The Case of Sri Lanka”, Research center for Social Sciences, University of Kelaniya, Sri Lanka.

Praveen Sethi, (1999),Hand book of Sustainable Tourism, Anomol Publication, New Delhi.


ღ